<u>DEPOSITION OF WITNESS</u>

<u>Judicial Form No. 53</u>

<u>(See Rule 42)</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 55/2025 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | L.W. 1 P.W.2 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கொங்குராஜ் | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | | ஜாதி | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |
| Mail ID | : | | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 09.03.2026.

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது குடிமங்கலம் காவல் நிலையத்தில் காவல் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் இருந்து வருகிறேன். இதற்கு முன் அமராவதி நகர் தலைமை காவலராக பணியில் இருந்த போது கடநத் 02.02.2025 ம் தேதி நானும் சிறப்பு உதவி ஆய்வாளர பொருட்செல்வன் மற்றும் தலைமை காவலர் ஜெய் பிரகாஷ் மது விலக்கு குற்றங்களை தடுக்க ரோந்து போன போது 9/6 செக்போஸ்ட்டில் கண்காணித்த போது உதவி ஆய்வாளருக்கு டாஸ்மாக் கடை அருகில் அரசு அனுமதியின்றி சட்ட விரோதமாக அதிக விலைக்கு மது பானம் விற்பதாக தகவல் கிடைத்து 9.00 மணிக்கு அங்கு சென்றோம். அப்போது இரண்டு நபர்கள் ஒரு நபரிடம் ஏதோ வாங்கி கொண்டிருந்ததாகவும், எங்களை பார்த்ததும் அந்த இரு நபர்கள் ஓடி விட்டார்கள் .கையில் பையுடன் இருந்த ஒரு நபரை பிடித்து விசாரித்த போது அவர் பெயர் அப்துல்லா த/பெ. இப்ராகிம் அமராவதி நகரர் என்று சொன்னவரிடம் அவரிடம் காப்பர் பிராந்தி 7 Express, ஒன் மேன் ஆரமி –5 பாட்டில்கள், OAK Votka –5 என பிராந்தி

பாட்டில்கள் இருந்தது 180Ml அளவுள்ள பிராந்தி ரம் பாட்டில்களை அதிக விலைக்கு விற்பனை செய்வதற்கு வைத்திருந்ததாக அவரே ஒப்பு கொண்டார். உதவி ஆய்வாளர் மேற்படி பிராந்தி பாட்டில்களை கைப்பற்றி கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினார். பொது ஜன சாட்சிகள் முன் வராததால் நானும் தலைமை காவலர் ஜெய் பிரகாஷ் என்பவரும் கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டடப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள 1 வது கையெழுத்து என்னுடையது தான். பின்னர் உதவி ஆய்வாளர் உயர் அதிகாரியின் உத்தரவின் படி வழக்கு சொத்துக்களை அழித்து அழித்தல் மகசர் தயார் செய்தார் . அதில் நானும் தலைமை காவலர் ஜெய் பிரகாஷ் என்பவரும் கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டடப்படும் அழித்தல் மகசரில் உள்ள 1 வது கையெழுத்து என்னுடையது தான். எதிரியை காவல் நிலையத்தை அழைதது வந்து பின்னர் எதிரியின் மீது குற்ற எண் 15/2025 ச/பி. 4(1) C TNP– Amendment Act ன் படி சிறப்பு உதவி ஆய்வாளர் முதல் தகவல் அறிக்கை தயார் செய்தார். அதற்கு நாங்கள் உதவியாக இருந்தோம். சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. ரோந்து போனதாக சொல்லியுள்ள நிலையல் எத்தனை மணிக்கு எந்த எந்த பகுதிக்கு சென்றிர்கள் என்றால் காலை 9.00 மணிக்கு 9/6 செக்போஸ்ட் அருகில். வேறு எந்த பகுதிக்கும் செல்லவில்லை என்றால் ஆமாம். எந்த எந்த வாகன்ததில் யார் யார் சென்றிர்கள் என்றால் இருசக்கர வாகனத்தில் உதவி ஆய்வாளர் மற்றும் நான் மற்றும் தலைமை காவலர் மூன்று பேரும் சென்றோம் . 9/6 கசெக்போஸ்ட் முன் மது பான கடையில் சிசிடிவி கேமரா உள்ளது என்றால் சரிதான். எப்படி எந்த ஊரு நபருக்கும் விற்றதை நீங்கள் நேரில் பார்க்கவில்லை என்றால் நான் பார்க்கவில்லை. மது பாட்டில் செல்ல அனைத்தும் சோதனை செய்து மது பானம் என்று தெரிந்து கொண்டிர்களா என்றால் சோதனை செய்யவில்லை மதுபானம் தெரிந்தது. எப்படி மது பானம் என்று தெரிந்து கொண்டிர்கள் என்றால் அதன் வாசத்தை வைத்து தெரிந்து கொண்டோம். மது பாட்டில்களை திற்ந்து பார்த்திர்கள் என்றால் ஆமாம் . கைப்பற்றுதல் மகசர் மற்றும் அழித்தல் மகசரும் அங்கேயே தயார் செய்யப்பட்டதா என்றால் ஆமாம்.
2. கைப்பற்றுதல் மகசர் மற்றும் அழித்தல் மகசர் தயார் வரை நீங்கள் அங்கே இருந்தீர்கள் என்றாலும் வேறு எங்கும் செல்லவில்லை என்றாலும் ஆமாம்.கைப்பற்றுதல் மகசர் மற்றும் அழித்தல் மகசர்

எங்கு வைத்து பிரிண்ட் எடுக்கப்பட்டது என்றால் அங்கே வைத்து தான் எடுத்தோம்.ரோந்து போகும் பொழுது பிரிண்டர் லேப்டாப் எடுத்து செல்வீர்களா என்றால் இல்லை மொபைல் போன் தான் எடுத்து செல்வோம். எதிரி சம்பவ இடத்தில் இருந்ததாக சொல்லியுள்ள நிலையில் அங்கு எதிரி மட்டும்தான் இருந்தார் என்றால் சரிதான். இது குறித்து வரைபடம் போடவில்லை என்றால் ஆமாம் உண்மையில் சம்பவ இடம் சென்றிருந்தால் வரைபடம் தயார் செய்து இருப்பீர்கள் என்றாலும் புள்ளி விவர கணக்கிற்காக எதிரி மீது பொய்யாக போடப்பட்ட வழக்கு என்றாலும் சரியல்ல.

3. கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றியதாக சொல்லப்படும் பிராந்தி பாட்டில்களின் கொள்ளளவு 3 லிட்டர் என்றால் அது பற்றி தெரியாது. கைப்பற்றிய பையை என்ன செய்திர்கள் என்றால் அது பற்றி தெரியவில்லை. 17 மது பாட்டில்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திர்களா என்றால் அது பற்றி தெரியவில்லை. பொது ஜன சாட்சிகள் முன் வராததற்கான காரணம் குறித்து உதவி ஆய்வாளர் வழக்கு கோப்பில் சொல்லியுள்ளாரா என்றால் இல்லை. 9/6 செக் போஸ்ட் என்பது மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள பகுதி என்றால் ஆமாம். உண்மையில் சம்பவம் நடைபெற்றிருந்தல் அங்குள்ள பொது ஜன சாட்சிகளை விசாரித்து இருப்பீர்கள் என்றாலும் செக் போஸ்டில் உள்ள காவலர்களை விசாரித்து சாட்சியாக சேர்த்து இருப்பீர்கள் என்றாலும் சாட்சிகளாக சேர்த்து இருப்பீர்கள் என்றால் அது பற்றி தெரியவில்லை காவல நிலையத்தில் வைத்து அனைத்து ஆவணங்களும் தயார் செய்யப்பட்டு அங்கு பிரிண்ட் எடுக்கப்பட்டு புள்ளி விவர கணக்கிற்காக போடப்பட்ட பொய்யான வழக்கு என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T.Nithyakala Bcom.,B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.